ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1355/4 – 2004 අගෝස්තු 23 වැනි සඳුදා – 2004.08.23

1355/4 ஆம் இலக்கம் – 2004 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வெ. – பீ 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 (1) ஆம் பிரிவின்கீழான கட்டளை

சனாதிபதி, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தில் 21 ஆம் பிரிவின்கீழ் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் தொடர்பில் ஆக்கப்பட்டதும் 1995, நவெம்பர் 07 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, (IV) ஆம் பந்தியில் "அத்துடன் பிரயோக அறிவியல் என்பவற்றிற்கான துறைகளைக் குறித்துரைக்கின்றேன்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிரயோக அறிவியல் அத்துடன் புவிசார் விஞ்ஞானம் என்பவற்றிற்கான துறைகளைக் குறித்துரைக்கின்றேன்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் நிரல் I மற்றும் நிரல் II என்பவற்றின் முடிவில் முறையே பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் திருத்துகின்றேன்.

| | |
|---|---|
| "புவிசார் விஞ்ஞான பீடம் | நிலஅளவையியல், புவிப் பாத்தியல் பிரிவு<br>படவரையியல், ஒளிப்பட அளவையியல், தொலை உணர்வு,<br>புவிசார் தகவல் முறைமைகள்." |

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2004, ஓகத்து 17.

09-209


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.